**செய்தி வெளியீடு எண்: 02/03/2021** **நாள்: 02.03.2021**

**பத்திரிக்கைச் செய்தி**

**07.09.2020 முதல் 28.02.2021 வரை 65.50 லட்சம் பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்**

**2021 பிப்ரவரி மாதத்தில் 20.54 லட்சம் பயணிகள் சென்னை மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்**

சென்னை மெட்ரோ இரயில் சேவைகள் கடந்த செப்டம்பர் மாதம் 7-ஆம் தேதி முதல் மீண்டும் துவங்கியது.

07.09.2020 முதல் 28.02.2021 வரை மொத்தம் 65,50,794 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

07.09.2020 முதல் 31.12.2020 வரை மொத்தம் 31,52,446 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

01.01.2021 முதல் 31.01.2021 வரை மொத்தம் 13,43,695 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

01.02.2021 முதல் 28.02.2021 வரை மொத்தம் 20,54,653 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

14.02.2021 அன்று 1,37,957 பயணிகள் மற்றும் 26.02.2021 அன்று 1,15,892 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

சமீபத்தில் தொடங்கப்பட்ட க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி செப்டம்பர், 2020 முதல் பிப்ரவரி, 2021 வரை மொத்தம் 1,50,355 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். மேலும், பயண அட்டை பயணச்சீட்டு (Travel Card Ticketing System) முறையைப் பயன்படுத்தி 34,64,850 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

2021, பிப்ரவரி மாதத்தில் மட்டும் க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 40,850 பயணிகள் மெட்ரோ இரயில்களில் பயணம் செய்துள்ளனர். மேலும், பயண அட்டை பயணச்சீட்டு (Travel Card Ticketing System) முறையைப் பயன்படுத்தி 9,84,665 பயணிகள் பயணம் செய்துள்ளனர்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில்களில் பயணிப்பவர்களுக்கு க்யுஆர் குறியீடு (QR Code) பயணச்சீட்டில் ஒருவழிப்பயண அட்டை, இருவழிப்பயண அட்டை, பலவழி பயன்பாடு அட்டை ஆகியவற்றில் 11.09.2020 முதல் 20% கட்டணத் தள்ளுபடி அளித்து வருகிறது. மெட்ரோ இரயில்

பயண அட்டைகளை (Travel Card) பயன்படுத்தி பயணிக்கும் பயணிகளுக்கு 22.02.2021 முதல் 20% கட்டணத் தள்ளுபடி வழங்கப்படுகிறது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காகவும் அனைத்து பயணிகளின் பாதுகாப்பான பயணத்திற்காகவும் மேற்கொண்டுள்ள பயணச்சீட்டு வழங்கும் முறை மற்றும் அனைத்து விதிமுறைகளையும் பயணிகள் பின்பற்றி தனிமனித இடைவெளியை கடைபிடித்து சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**